Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 31 | திங்கள் Monday | 01.12.2025 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## டிட்வா புயலால் பேரழிவை சந்தித்துள்ள

# இலங்கை மக்களுக்கு துணைநிற்க தமிழ்நாடு தயார்





## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை:

"டிட்வா புயல் காரணமாக கடுமையாக பாதிக்க ப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு மத்திய அரசின் மூலம் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது" என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இலங்கையில் டிட்வா புயலால் ஏற்பட்ட கடும் மழை வெள்ளம் அந்நாட்டு மக்களை பெரும் அவதிக்கு உள்ளாக்கியுள்ளது. நவம்பர் 17 ஆம்தேதி முதல் மழை தொடர்ச்சியாக பெய்து வரும் கனமழையால், வரலாறு காணாத பாதிப்புகளை மக்கள் சந்தித்து வருகின்றனர். கனமழையால், நிலச்சரிவும், வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. கனமழை எதிரொலியாக, பல்வேறு பகுதிகளிலும் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.


இலங்கையில் கனமழையில் சிக்கி இதுவரை 153 பேர் பலியாகி உள்ளனர். 200 பேரை காணவில்லை. கனமழை காரணமாக 20 ஆயிரம் வீடுகள் சேதமடைந்து விட்டன. 1.08 லட்சம் பேர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு உள்ளனர். 2.19 லட்சத்திற்கும் மேற்பட்டோர் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர் என இலங்கை பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது. புயல் பாதிப்பு மற்றும் மழை, நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு உள்ள இலங்கை மக்களுக்கு உதவிட அண்டை நாடான இந்தியா முன்வந்துள்ளது. இலங்கையில் இயற்கைப் பேரிடரை முன்னிட்டு, இந்தியா சார்பில் ஆபரேஷன் சாகர் பந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதன் கீழ், மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண உதவியை இந்தியா வழங்குகிறது. ஐ.என்.எஸ் விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ்.உதயகிரி கப்பல்கள் மூலம் கொழும்பு நகரில் நிவாரண உதவி பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்திய விமான படையின் சி–130 ஜே விமானத்தில் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு நிவாரண பொருட்கள் கொண்டு செல்லப்பட்டன. அதில், கூடாரங்கள், தார்ப்பாய்கள், போர்வைகள், சுகாதார நலன் சார்ந்த பொருட்கள் மற்றும் உடனடியாக சாப்பிட கூடிய உணவு பொருட்கள் உள்ளிட்ட 12 டன் நிவாரண பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில், டிட்வா புயலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு துணை நிற்க தமிழ்நாடு தயார் என தமிழக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். டிட்வா புயலால் இலங்கை பேரழிவைச் சந்தித்துள்ள நிலையில் உயிரிழந்தோருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார் முதல்வர் ஸ்டாலின். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "டிட்வா புயல் காரணமாக நமது அண்டை நாடான இலங்கை பொழிவைச் சந்தித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் இறந்தும் பல இடங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகியும் இலங்கை மக்கள் அவதியுறுகின்றனர்.

இந்த இயற்கைச் சீற்றத்தில் இறந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, இலங்கை மக்களின் இப்பெருந்துயரில் தமிழ்நாடும் தமிழ்நாட்டு மக்களும் பங்கெடுக்கிறோம். இலங்கையில் சிக்கித் தவிக்கும் தமிழ்நாட்டை சேர்ந்த பயணிகளை மீட்க அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, முதற்கட்டமாக 177 பேர் (ஆண்கள் 113, பெண்கள் 60, குழந்தைகள் 4) தமிழ்நாட்டுக்குத் திரும்ப அழைத்து வரப்பட்டுள்ளனர். டிட்வா புயல் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு ஒன்றிய அரசின் மூலம் உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் உள்ளிட்டவற்றைத் தந்து, அவர்கள் மீண்டெழுந்திட உதவிக்கரம் நீட்டிடத் தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. இதற்காக ஒன்றிய அரசுடன் இணைந்து செயல்பட அதிகாரிகள் குழுவை அமைத்திடத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன்." எனத் தெரிவித்துள்ளார்.

## சென்னைக்கு தெற்கே 170 கி.மீ. தொலைவில் 'டிட்வா' புயல்...

# டிட்வா புயலால் 3 பேர் பலி; 57 ஆயிரம் ஹெக்டேர் விளை நிலங்கள் பாதிப்பு: தமிழக அரசு தகவல்




தென்மேற்கு வங்காள விரிகுடா மற்றும் அதை ஒட்டிய வடக்கு தமிழ்நாடு–புதுச்சேரி கடற்கரைகளில் கடந்த 6 மணி நேரத்தில் மணிக்கு 7 கிமீ வேகத்தில் டிட்வா புயல் நகர்ந்து வருகிறது.

இந்நிலையில் டிட்வா' புயல் காரைக்காலுக்கு கிழக்கு–வடகிழக்கில் சுமார் 100 கிமீ, வேதாரண்யத்திற்கு வடகிழக்கில் 140 கிமீ மற்றும் சென்னைக்கு தென்–தென்கிழக்கில் 170 கிமீ. தொலைவிலும் மையம் கொண்டுள்ளதாக வானிலை மையம் தகவல் தெரிவித்துள்ளது

'டிட்வா' புயல் அடுத்த 24 மணி நேரத்தில் இது வடக்கு தமிழ்நாடு–புதுச்சேரி கடற்கரைகளுக்கு இணையாக கிட்டத்தட்ட வடக்கு நோக்கி நகர வாய்ப்புள்ளது. வடக்கு நோக்கி நகரும் போது, சூறாவளி புயல் தென்மேற்கு வங்காள விரி குடாவில் இன்று (நவம்பர் 30) நண்பகல் மற்றும் மாலை நேரங்களில் தமிழ்நாடு–புதுச்சேரி கடற்கரையிலிருந்து குறைந்தபட்சம் 70 கி.மீ மற்றும் 30 கி.மீ தூரத்தில் மையம் கொண்டிருக்கும் என்று இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் காரைக்கால் பகுதியில் 19 செ.மீ. மழை கொட்டித் தீர்த்தது. தமிழ்நாட்டில் அதிகபட்சமாக மயிலாடுதுறை செம்பனார்கோயில் பகுதியில் 17 செ.மீ.கனமழை பெய்தது. நாகையில் 15, திருவாரூரில் 14, ராமநாதபுரத்தில் 13 செ.மீ.மழை பதிவாகி உள்ளது.

இந்நிலையில் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அமைச்சர் KKSSR ராமச்சந்திரன், "காவிரிப் படுகை மாவட்டங்களில் சுமார் 56,000 ஹெக்டேர் நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. மழை நின்ற பிறகு பயிர் பாதிப்பு குறித்து முழுமையாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும். 38 நிவாரண மையங்கள் அமைக்கப்பட்டு 2,330 பேர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் ஆந்திராவுக்கு வானிலை ஆய்வு மையம் ரெட் அலர்ட் விடுத்துள்ளது. இந்த புயல் தெலுங்கானாவையும் தாக்க வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இந்த புயல் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கடற்கரையிலிருந்து 50 முதல் 60 கிலோமீட்டர் தொலைவில் கடக்கும் என்பதால், அடுத்த இரண்டு நாட்களுக்கு இந்தப் பகுதியில் மிக கனமழை பெய்யும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

டிட்வா புயல் காரணமாக தமிழகத்தில் இதுவரை 3 பேர் பலியானதாகவும், 57 ஆயிரம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தமிழக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர் ராமசந்திரன் சென்னையில் இன்று (நவ.30) செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: தமிழகத்தில் டிட்வா புயல் மழை தொடர்பான சம்பவங்களில் 3 பேர் உயிரிழந்தனர். இருவர் தூத்துக்குடி, தஞ்சாவூர் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து இறந்தனர். மயிலாடுதுறையில் 20 வயது இளைஞர் ஒருவர் மின்சாரம் பாய்ந்து உயிரிழந்தார். 149 கால்நடைகள் உயிரிழந்தன.

57 ஆயிரம் ஹெக்டேர் அளவிலான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் நாகப்பட்டினத்தில் மட்டும் 24 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும், தஞ்சையில் 15 ஆயிரம் ஹெக்டேர் விளைநிலங்களும், மயிலாடுதுறையில் 8000 ஹெக்டேர் விளைநிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி பாதிக்கப்பட்டுள்ளன. இதுதவிர டெல்டா மாவட்டங்களில் 234 குடிசைகள் சேதமடைந்துள்ளன.

38 நிவாரண முகாம்கள்: தமிழகத்தில் மழை பாதிப்பு அதிகமுள்ள 9 மாவட்டங்களில் 38 நிவாரண முகாம்கள் ஏற்படுத்தி அதில் 2300 பேரை தங்க வைத்துள்ளோம்.

புயலின் அடுத்தக்கட்ட தாக்கம் குறித்து இந்திய வானிலை ஆய்வு மையம் இன்று மதியம் புதிய அறிவிப்பு வெளியிடும். அதன் அடிப்படையில் மாவட்ட நிர்வாகங்கள் மேலும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். பொதுமக்கள் வதந்திகளை நம்பாமல் அரசு சார்பாக வெளியிடப்படும் அறிவிப்புகளை மட்டும் பின்பற்ற வேண்டும்

# பூர்த்தி செய்த எஸ்ஐஆர் படிவம் வழங்க கால அவகாசம் டிச.11 வரை நீட்டிப்பு



சென்னை:

பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் விண்ணப்பங்களை ஒப்படைக்க டிச.,11–ம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தமிழகம், கேரளா, மேற்குவங்கம், சத்தீஸ்கர், கோவா, குஜராத், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், என 9 மாநிலங்கள் மற்றும் அந்தமான் நிகோபார் தீவுகள், புதுச்சேரி, லட்சத்தீவு ஆகிய 3 யூனியன் பிரதேசங்களுக்கும் இந்த கால அவகாசம் நீட்டிப்பு பொருந்தும் என தேர்தல் ஆணைய செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் கடந்த 4 ஆம் தேதி முதல் எஸ்.ஐ.ஆர் என்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தொடங்கின. இந்தப் பணிகளில் தமிழகம் முழுவதும் 68,470 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பிஎல்ஓ.) ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதல் நாளில் இருந்தே வீடு வீடாகச் சென்று வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் கொடுத்து வருகின்றனர்.

ஆனால், தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்ஐஆர்) பணிகளில் பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளது எனக்கூறி திமுக எதிர்ப்பு தெரிவித்து வருவது கவனிக்கத்தக்கது.

இந்நிலையில், பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் விண்ணப்பங்களை ஒப்படைக்க டிச.,11–ம் தேதி வரை கால அவகாசத்தை நீட்டித்து இந்திய தேர்தல் ஆணையம் உத்தவிட்டுள்ளது.

அதாவது, எஸ்ஐஆர் நடைமுறைகள் டிசம்பர் 4 ஆம் தேதியுடன் முடிவடையவிருந்த நிலையில், மேலும் ஒரு வாரம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், வரைவு வாக்காளர்பட்டியல் டிச.16–ம் தேதியும், வாக்காளர் இறுதிப் பட்டியல் பிப்.14 –ம் தேதியும் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுளது.

**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# ஸ்ரீனிவாசா ரெசிடென்சி பேஸ் 3 ஸ்ரீசுந்தர விநாயகர் கோவில் கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது

## 108 வகையான மூலிகைகளைக் கொண்டு வேள்வி பூஜை நட ந்தது

கோவை பன்னீர்மடை ஊராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீனிவாசா ரெசிடென்சி



பேஸ் 3 பகுதியில், புதிதாக அமைக்கப்பட்ட ஸ்ரீ சுந்தர விநாயகர் திருக்கோவிலில் விநாயகர் சிலை நிறுவப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

கோவை பன்னீர்மடை ஊராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீனிவாசா ரெசிடென்சி பேஸ் 3 பகுதியில் 40 க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. இந்நிலையில் இங்குள்ள ரிசர்வ் சைட் பகுதியில் புதிதாக ஸ்ரீ சுந்தர விநாயகர் திருக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோவிலில் விநாயகர் சிலை பிரதிஷ்ட்டை செய்யப்பட்டு கும்பாபிஷேகம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் ஸ்ரீனிவாசா ரெசிடென்சி பேஸ் 3 பகுதியில் உள்ள அனைத்து வீடுகளில் இருந்தும் முளைப்பாரி எடுத்து வந்து கோவில் வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த யாக சாலையில் வைத்தனர்.

தொடர்ந்து 108 வகையான மூலிகைகளைக் கொண்டு முதற்கால வேள்வி பூஜை, இரண்டாம் கால வேள்வி பூஜைகள், கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம் உள்ளிட்டவைகள் நடைபெற்றது. யாகங்கள் மற்றும் கும்பாபிஷேகத்தை குருமூர்த்தி குருக்கள் மற்றும் சுவாமிநாத குருக்கள் ஆகியோர் நடத்தி வைத்தனர்.

தொடர்ந்து யாகசாலையில் இருந்து கும்பங்களில் எடுத்துவரப்பட்ட புனித நீர் நகரைச் சுற்றி ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு ஸ்ரீ சுந்தர விநாயகர் சிலை மீது ஊற்றி கும்பாபிஷேக நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து புனித நீரை பக்தர்கள் மீது தெளித்து ஆசி வழங்கினர். அதைத்தொடர்ந்துவிநாயகருக்கு அபிஷேக பூஜைகள் மற்றும்அலங்கார பூஜைகள் நடைபெற்றது.

இதில் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீனிவாசா ரெசிடென்சி பேஸ் 3 பகுதி குடியிருப்போர் செய்திருந்தனர்.

# வாக்குச்சாவடி முகவர்கள் நிலுவையில் உள்ள கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்ய உதவி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்கிட வேண்டும்

## அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனை கூட்டத்தில் சேலம் கலெக்டர் பிருந்தாதேவி அறிவிப்பு

வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தபணிகள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உட



னான ஆலோசனை கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி. இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் (28.11.2025) நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரதிருத்த பணிகள் 2026 அக்டோபர் மாதம் 28 ம் தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தற்கான கணக்கெடுப்பு பணிகள் சேலம் மாவட்டத்தில் நவம்பர் மாதம் 4 ஆம் தேதி முதல் டிசம்பர் 4 ஆம் தேதி வரையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி கணக்கெடுப்பு பணிகளின் போது அந்தந்த பகுதிகளுக்கு உட்பட்ட வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுதோறும் சென்று அந்தபாகங்களில் தற்போதைய 2025 வாக்காளர் பட்டியலில் பெயர் இடம்பெற்று இருக்கும் அனைத்து வாக்காளர்களுக்கும் தனித்தனியாக பெயர் மற்றும் புகைப்படத்துடன் அச்சிடப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெற ப்பட்டு வருகிறது.

சேலம் மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் பெற்று பதிவேற்றம் செய்யும் பணிகள் (28.11.2025) வரை 70% முடிவுற்றுள்ளது வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்வதற்கு உதவும் வகையில் சேலம் மாவட்டத்தில் தொடர்புடைய அனைத்து வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் நாளை 29.11.2025 மற்றும் 30.11.2025 ஆகிய 2 நாட்களுக்கு சிறப்பு உதவி மையங்கள் செயல்படும். இதனை வாக்காளர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து வழங்காத வாக்காளர்களிடமிருந்து பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரால் நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி முகவர்கள் வாக்காளர்களை தொடர்பு கொண்டு அவர்களுக்கு கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்ய உதவி செய்து நிலுவை படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் வழங்குவதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

கணக்கீட்டு படிவங்களைதிரும்பஒப்படைக்காத வாக்காளர்களது பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாத நிலை ஏற்படும் எனவே. அனைத்து வாக்காளர்களின் பெயர்களும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர். வாக்குச்சாவடி முகவர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித்தலைவர் இராயிருந்தாதேவி அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் இராரவிக்குமார் துணைஆட்சியர்(பயிற்சி) அபிராமி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.





# தென்காசியில் எஸ்டிபிஐ கட்சியின் மாவட்ட பூத் கமிட்டி மாநாடு

தென்காசி மாவட்ட, எஸ்டிபிஐ கட்சியின் பூத் கமிட்டி மாநாடு தென்காசி விடிஎஸ்ஆர் மகாலில் வைத்து நடை பெற்றது.

மாநாட்டிற்கு மாவட்ட தலைவர் திவான் ஒலி தலைமை வகித்தார். மாநில பொதுக்குழு உறுப்பினர் ஜாபர் அலி உஸ்மானி, நெல்லை மண்டல தலைவர் சிக்கந்தர், மாவட்ட துணைத் தலைவர் முகமது நயினார், மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர்சேக் முகமது ஒலி, மாவட்ட செயலாளர்கள் சீனா, சேனா, சர்தார், அப்துல் பாசித், நூர்முகமது, பொருளாளர் யாசர்கான் எம் சி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் அஸ்கர் அலி, மகளிர் அணி மாவட்ட தலைவி பரக்கத் நிஷா, மாவட்ட செயலாளர் சுலைகாள்,வேளாண் அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முகமது காசிம், இணை ஒருங்கிணைப்பாளர் அன்சாரி, வர்த்தக அணி மாவட்ட தலைவர் முஹம்மது கனி, செயலாளர் தமீம் அன்சாரி, தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட தலைவர் ஹக்கீம்,தென்காசிசட்டமன்றத் தொகுதி தலைவர் பீர் முகமது, தொகுதி செயலாளர் செய்யதுஅலி பாதுஷா, கடையநல்லூர் தொகுதி தலைவர் ஹக்கீம் சேட், செயலாளர் சாஜித் அலி, விஸ்வாகாஜா, அப்துல் அஜீஸ், முகமது நிசார், ஜமீன் ஆகியோர் முன்னிலை வகித்த னர்.

மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக மாநில பொதுச்செயலாளர்கள் நிஜாம் முகைதீன், கரீம், அகமது நவவி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர். சிறப்பு விருந்தினராக மாநில தலைவர் நெல்லை முபாரக்கலந்துகொண்டு பூத் கமிட்டி பொறுப்பாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி மாநாட்டு பேருரை ஆற்றினார்.

மாநாட்டில் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதில் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும், விவசாயிகளுக்கு விரோதமான விதைகள் சட்டம் 2025 வரைவு மசோதாவை கைவிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் இதில் நிறைவேற்றப்பட்டனர். முடிவில் மாவட்ட செயலாளர் அப்துல் பாசித் நன்றி கூறினார்.



ஈரோடு மாவட்டத்தில் அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை (பதிவு) புது டெல்லியை தேசிய தலைமையிடமாக கொண்டு மத்திய உள்துறை அமைச்சகத்தில் அங்கமான NFCHல் பதிவு பெற்று இந்தியா முழுவதும் பட்டியல் இன மக்களுக்கு பல்வேறு சேவைகள் செய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கிட வருகை புரிந்த மு.வெங்கடாசலம் நிறுவனத்தலைவர், தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை அனைத்து ஊழியர்கள் சுகாதார பணியாளர்கள் மற்றும் செவிலியர் உதவியாளர்கள் சங்கம் மற்றும் மாநில ஆலோசகர் மற்றும் மாநில துணைத்தலைவர் அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை மு.வெற்றிவேல் மாநில ஆலோசகர் தமிழ்நாடு அரசு மருத்துவத்துறை அனைத்து ஊழியர்கள் சுகாதார பணியாளர்கள்மற்றும்செவிலியர்உதவியாளர்கள்சங்கம்மற்றும்மாநிலசெயல்தலைவர், அகிலஇந்தியபட்டியல்இனஇளைஞர்பேரவைஅவர்களைமாநிலதலைவர்P.அய்யாசாமி ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின் படி ஈரோடு மாவட்ட தலைவர் G தங்கவேல் பொன்னாடை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் ஈரோடு மாவட்ட நிர்வாகிகள் வீரப்பன் (எ)சேகர், குப்புசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் மூலம் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குடிமைப்பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்

## கலெக்டர் பிரவீன் குமார் தகவல்

மதுரை மாவட்டத்தில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் மூலம் 70 வயதிற்கு மேற்பட்ட நபர்களுக்குஅவர்களதுவீட்டிற்கே



சென்று அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வந்தது. தற்போது முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கும், வீட்டிற்கே சென்று பொருள் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும், டிசம்பர் 2025 மாதத்திற்கு 02.12.2025 மற்றும் 03.12.2025 ஆகிய தேதிகளில் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் வீட்டிற்கே சென்று குடிமைப்பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது.

முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள்

இத்திட்டத்தினை பயன்படுத்திக் கொள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும், இந்த திட்டம் சார்ந்த பயனாளிகள் தங்களுடைய தொலைபேசி எண் மற்றும் முகவரி மாற்றம் ஏதும் இருப்பின் சம்பந்தப்பட்ட குடிமைப் பொருள் வட்டாட்சியர்கள், வட்ட வழங்கல் அலுவலர்கள் மற்றும் அருகில் உள்ள நியாய விலைக்கடைகளில் தெரிவித்து தீர்வுகள் பெற்றுக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

# டிட்வா புயல் பாதிப்பு: கும்பகோணம் அருகே சுவர் இடிந்து விழுந்து இளம்பெண் உயிரிழப்பு

கும்பகோணம்:

டிட்வா புயல் பாதிப்பு காரணமாக கும்பகோணம் அருகே வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் இளம்பெண் உயிரிழந்தார்

கும்பகோணம் வட்டம், ஆலமன்குறிச்சி உடையார் தெருவைச் சேர்ந்தவர் முத்துவேல் (56). இவரது மனைவி கீதா (45). இந்த தம்பதியினருக்கு கனிமொழி (21) மற்றும் ரேணுகா (20) என்ற இரண்டு மகள்கள் உள்ளனர்.இந்த நிலையில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்து வரும் கனமழை மற்றும் டிட்வா புயல் பாதிப்பு காரணமாக நேற்று (நவ.29) இரவு முத்துவேலின் வீட்டுச் சுவர் திடிரென இடிந்து விழுந்தது. இதில் வீட்டிலிருந்த 4 பேரும் இடிபாடுகளில் சிக்கி பலத்த காயமடைந்தனர்.

இதையறிந்த அருகில் உள்ளவர்கள் அவர்களை மீட்டு கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். மேலும், பலத்த காயமடைந்த 2 மகள்களை தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக மருத்துவர்கள் அனுப்பி வைத்தனர்.இதில் 2-வது மகள் ரேணுகா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சிகிச்சை பெற்று வரும் தம்பதியினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்த எம்எல்ஏ சாக்கோட்டை அன்பழ-



கன் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று சிகிச்சை பெற்று வரும் தம்பதியினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்த எம்எல்ஏ சாக்கோட்டை க. அன்பழகன் சுவாமி மலை போலீஸார் வழக்கு பதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இதையறிந்த கும்பகோணம் எம்எல்ஏ சாக்கோட்டை க.அன்பழகன் கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு நேரில் சென்று சிகிச்சை பெற்று வரும் தம்பதியினரை பார்வையிட்டு ஆறுதல் தெரிவித்தார்.

## கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சாலை துடியலூர் அருகே

# சேலம் ஆர் ஆர் பிரியாணியின் புதிய கிளையை அதன், நிறுவனர் ஆர் ஆர் தமிழ்செல்வன் திறந்து வைத்தார்





கோவை மேட்டுப்பாளையம் சாலை துடியலூர் அருகே தொப்பம்பட்டி பிரிவு பகுதியில் புதியதாக சேலம் ஆர் ஆர் பிரியாணியின் புதிய கிளை திறக்கப்பட்டுள்ளது. இதனை சேலம் ஆர் ஆர் பிரியாணி நிறுவனர் தமிழ்செல்வன் மற்றும் திமுக மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ ரவி ஆகியோர் ரிப்பன் வெட்டியும்குத்துவிளக்கு ஏற்றியும் திறந்து வைத்தனர். மேலும் முதல் விற்பனையையும் தொடங்கி வைத்தனர்.

தமிழகத்தில் மிகபிரபலமாக உள்ள சேலம் ஆர் ஆர் பிரியாணி கடை. இதற்கு உலகம் முழுவதிலும் 100 க்கும் மேற்பட்ட கிளைகள் உள்ளன. இந்த நிலையில் கோவை மேட்டுப்பாளையம் சாலையில் துடியலூர் அருகே தொப்பம்பட்டி பிரிவு பகுதியில் புதிதாக சேலம் ஆர் ஆர் பிரியாணி கடையின் கிளை திறக்கப்பட்டுள்ளது.

இக்கடையினை சேலம் ஆர் ஆர் பிரியாணி நிறுவனர் ஆர் ஆர் தமிழ்செல்வன் மற்றும் திமுக மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ ரவி ஆகியோர் ரிப்பன் வெட்டியும்குத்துவிளக்கு ஏற்றியும் திறந்து வைத்தனர். மேலும் முதல் விற்பனையையும் தொடங்கி வைத்தனர். காலை 11 மணி முதல் இரவு 11 மணி வரை கடை செயல்படும் இக்கிளையில் ஒரே நேரத்தில் 100 க்கும் மேற்பட்டோர் அமர்ந்து உணவருந்தும் வசதியில் இரு தளங்கள் உள்ளன. இங்கு பிரியாணி மட்டும் இன்றி இட்லி, தோசை, பரோட்டா, சைவ அசைவ சாப்பாடு, சைனீஷ், நான், ரொட்டி, கிரில், தந்தூரி உள்ளிட்ட அனைத்து வகை உணவுகளும் கிடைக்கும். மேலும் குடும்பவிழாக்கள் நடத்தும் வகையில் ஹால் வசதியும் உள்ளது.

திறப்பு விழா சலுகையாக ஒரு பக்கெட் சிக்கன் பிரியாணிக்கு ஒரு கிரில் சிக்கன் இலவசமாகவும், ஒருபக்கெட் மட்டன் பிரியாணிக்கு ஒரு கிரில் சிக்கன் இலவசமாகவும் வழங்கப்பட்டன. மேலும் 2 சிக்கன் பிரியாணி வாங்கினால் ஒரு சிக்கன் பிரியாணியும், ஒரு மட்டன் பிரியாணி வாங்கினால் ஒரு சிக்கன் 65 இலவசமாகவும் வழங்கப்பட்டது. கிளை திறப்பு விழாவிற்கு முன்பே வாடிக்கையாளர் குவியத்தொடங்கினர். தொடர்ந்து கிளை திறந்ததும் நீண்ட வரிசையில் நின்று வாடிக்கையாளர்கள் பிரியாணியினை வாங்கிச் சென்றனர். எதிர்பார்த்ததை விட வாடிக்கையாளர்களிடம் அமோக வரவேற்பு கிடைத்ததாக கிளை உரிமையாளர்கள் ராஜா மற்றும் காஜா மைதீன் ஆகியோர் தெரிவித்தனர்.

இத்திறப்பு விழாவில் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கார்த்தி, முன்னாள் குருடம்பாளையம் ஊராட்சி தலைவர் பி வி மணி மற்றும் அப்பகுதி முக்கியஸ்தர்கள் மற்றும் கிளை உரிமையாளர்களின் குடும்பத்தினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய ஆர் ஆர் பிரியாணி நிறுவனர் தமிழ்செல்வன் பேசும் போது நம்மிடம் வரும் வாடிக்கையாளர் வயிறு நிறையும் வகையில் உணவு வழங்க வேண்டும் என்ற காரணத்தை கொண்டும் தரத்தில் சமரசம் செய்துகொள்ளக்கூடாது என தெரிவித்தார். மேலும் இளைஞர்கள் போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகாமல் நன்றாக உழைத்து முன்னேற வேண்டும் என கேட்டுக்கொண்டார். மேலும் கோவையில் புதிதாக கட்டப்பட்ட மேம்பாலத்திற்குஜிடிநாயுடுபெயரை வைத்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.



# கோவை போத்தனூர் சாலையில் அரேபியன் டெஸர்ட் வகை உணவுகளுக்கான மெல்பான் துவக்கம்

## புதிய மெல்பான் கிளையை ஏ.கே.எஸ்.நிறுவனங்களின் தலைவர் சுல்தான் அமீர் திறந்து வைத்தார்

சவூதிஅரேபியா,துபாய் போன்ற வளைகுடா நாடுகளில் உள்ள அரேபியன் வகை உணவுகளை உணவு பிரியர்கள் ஆர்வமுடன் ருசித்து வருகின்றனர்.. அந்த வகையில் அரேபியன் வகை டெசர்ட் உணவுகள் விற்பனையில் முன்னனி நிறுவனமான மெல்பான் கோவையில் தனதுவிற்பனைமையங்களை துவக்கி வருகின்றனர். ஐஸ் கிரீமுடன் இணைத்து பல்வேறு சுவைகளில் வழங்கப்படும் மெல்பான் டெஸ்ஸர்ட் இனிப்பு விற்பனை தற்போது கோவையில் சூடு பிடித்து வருகிறது..

இந்நிலையில் மெல்பான் கோவையில் தனது புதிய விற்பனை கிளை, போத்தனூர் சாலையில் உள்ள சங்கமம் திருமண மண்டபம்அருகேதுவங்கப்பட்டுள்ளது. இதற்கானதுவக்கவிழாமெல்பான் கிளை உரிமையாளர்கள் .சுஹைல் அஹமத்,சாஜித்அஹமத் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது..

துவக்க விழாவில் சிறப்பு விருந்தினராக ஏ.கே.எஸ்.நிறுவனங்களின் தலைவர் சுல்தான் அமீர் கலந்து கொண்டு புதிய மெல்பான் கிளையை. ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில்,முதல் விற்பனையை ஹாஜி,இனயாத்துல்லாஹ் துவக்கி வைக்க, எம்.எம்.கே.தலைமை பொருளாளர் ஹாஜி உம்மர்,தி.மு.க.மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ் ஆகியோர் முதல் விற்பனையை பெற்று கொண்டனர்.

விழாவில் கவுரவ அழைப்பாளர்களாக,ஸ்ரீதேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சிவகணேஷ்,86 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அஹமது கபீர், ஜமாத்தே இ இஸ்லாமிக் ஹிந்த் செயலாளர் அப்துல் ஹக்கீம், கோவை மாவட்ட காஜி.அப்துல் ரஹீம் ஹஜ்ரத்,மாலிக் ஹஜ்ரத்,அப்துல் ரஹ்மான் ஹஜ்ரத்,அய்யூப் ஹஜ்ரத் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்..

விழாவில், தஜ்மல், அம்ஜத்.பைசல்.சபீர்அலி,முஸ்தபா,இஸ்மாயில்,நாகூர் மீரான்,காஜா முகம்மது, முகமது யாசீன்.சர்புதீன்,அமீர் அப்பாஸ்.உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெள்ளாலங்குளம் எம்.ஜே. பாண்டியன் அறக்கட்டளையின் சார்பில் கல்வித்தந்தை எம்.ஜே. பாண்டியன் நூற்றாண்டு விழா

வெள்ளாலங்குளம் எம் ஜே பாண்டியன் அறக்கட்டளையின் சார்பில் கல்வித்தந்தை எம் ஜே பாண்டியன் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி குழந்தைகளுக்கு வழிகாட்டு புத்தகங்கள் வழங்கப்பட்டன. வெள்ளாளங்குளம் பகுதியில் மக்களுக்கு கல்வி முன்னேற்றம் வழங்கும் வகையில் கல்வி தொண்டு புரிந்த கல்வி தந்தை எம் ஜே பாண்டியன் நூற்றாண்டு விழா எம் ஜே பாண்டியன் அறக்கட்டளை சார்பில் நடந்தது நிகழ்ச்சிக்கு அறக்கட்டளையின் நிர்வாகி மணி பாரதி தலைமை வகித்தார். சங்கரன்கோவில் மணி, முன்னாள் குடியரசுத் தலைவரின் நேர்முக உதவியாளர் நடராஜன் வெள்ளாளங்குளம் விவேகானந்தா கல்லூரியின் நிர்வாக இயக்குனர் ஜெனிட்டா,  வீரசிகாமணி விவேகானந்தா குளோபல் பள்ளி இயக்குனர் ஃபெலின்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வெள்ளாளங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் நாராயணன் வரவேற்புரை வழங்கி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

நிகழ்ச்சியில் வெள்ளாளங்குளம் பகுதி மக்களின் கல்வி மற்றும் முன்னேற்ற த்திற்கு எம் ஜே பாண்டியன் வழங்கிய தொண்டுகள் குறித்தும்,அவரின் வழியில் கல்வி கற்று முன்னேற வேண்டியது குறித்தும் பேசினர். பள்ளி குழந்தைகளுக்கு டிஎன்பிஎஸ்சி உள்ளிட்ட அரசு தேர்வுகளில் வெற்றிபெறும் வகையில் வழிகாட்டி புத்தகங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் கோமதி அம்மாள் திருக்கோயில் ஒன்றாம் மண்டகப்படி தலைவர் பொன்மொழிச் சோழன், விக்னேஸ்வரன், பட்டிமன்ற பேச்சாளர் சங்கரேஸ்வரி,வென்றிலிங்கபுரம் பள்ளி தலைமை ஆசிரியர் சந்தனகுமார், பார்கவிராஜன், 18 கிராம கல்வி அறக்கட்டளை தலைவர் சமுத்திரக்கனி, முத்துசாமி, சித்தரேசன், அருணகிரி, சரவணவேல் முருகையா உட்பட ஏராளமான பொதுமக்களும், பள்ளி குழந்தைகளும் கலந்து கொண்டனர். பாண்டியன் நன்றி கூறினார்





தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக 30.11.2025 நேற்று பொதுச்செயலாளர் எம். யுவராஜா தலைமையில் கோயம்புத்தூர் PSG மருத்துவமனையுடன் இணைந்து கிண்டர் ஹாஸ் ப்ரீ ஸ்கூல் காவேரி ரோடு வீரப்பன் சத்திரத்தில் முழு உடல் இலவச பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பயனடைந்தனர். இந்நிகழ்வில் தமிழ் மாநில காங்கிரஸ் இளைஞர் அணி மத்திய மாவட்ட துணைத்தலைவர் மாயா வெங்கடேஷ், மாவட்ட பொதுச்செயலாளர் மார்க்கெட் சஞ்சய், முன்னாள் கவுன்சிலர் திரு சின்னச்சாமி, மாவட்ட பொதுச் செயலாளர் ரிப்போர்ட்டர் ராஜேந்திரன், மாவட்ட பொதுச் செயலாளர் கராத்தே குட்டி ராஜா, வார்டு தலைவர் அருண்குமார், கீரி (எ) சந்திரசேகர் ரூபன் தனசேகர் மற்றும் பலர் பங்கேற்றனர்.

# ஈரோடு மாநகர் மீனாட்சி சுந்தரனார் சாலையில் வைல்டு லைப் லெதர் வேர்ல்ட் புதிய கடை திறப்பு விழா



ஈரோடு மாநகர் சவிதா மருத்துவமனைக்கு அருகில் உள்ள மீனாட்சி சுந்தரனார் சாலையில், புதிதாக துவங்கப்பட்டுள்ள வைல்டு லைப் லெதர் வேர்ல்ட் (Wild Life Leather World) கடையின் திறப்பு விழா நேற்று (30.11.2025) சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவிற்கு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினரான வி.சி.சந்திரகுமார், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மண்டல தலைவரும், ஈரோடு செங்குந்தர் மகாஜன சங்கத்தின் மாவட்ட செயலாளருமான சோழா ஆசைத்தம்பி மற்றும் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாநில துணைத்தலைவர்,ஈரோடு செங்குந்தர் மகாஜன சங்கத்தின் மாவட்ட தலைவர் நந்தகோபால் ஆகியோர் சிறப்பு விருந்தி னர்களாகக் கலந்து கொண்டு, ரிப்பன் வெட்டி கடையை திறந்து வைத்தனர்.

திறப்பு விழா நிகழ்வைத் தொடர்ந்து, சிறப்பு விருந்தினர்கள் முதல் விற்பனையையும் தொடங்கி வைத்தனர்.

விழாவில் வருகை தந்து, கடையைத் திறந்து வைத்து சிறப்பித்த சட்டமன்ற உறுப்பினர் மற்றும் செங்குந்த மகாஜன சங்கத்தின் தலைவர்கள் அனைவருக்கும், கடையின் உரிமையாளர் மோகன் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# ஓ.பி.எஸ். அணியின் ஈரோடு மாவட்ட அமைப்பில் மாற்றம் மாநகர் மாவட்டச் செயலாளராக கார்த்திக் நியமனம்



அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்புக் குழுவின் (ஓ.பி.எஸ். அணி) ஈரோடு மாவட்ட நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. முன்னாள் முதலமைச்சரும், குழுவின் ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கையின்படி, ஈரோடு மாவட்டம் நிர்வாக வசதிக்காக நான்கு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இனி ஈரோடு மாநகர் மாவட்டம், மத்திய மாவட்டம், புறநகர் கிழக்கு மாவட்டம், புறநகர் மேற்கு மாவட்டம் என நான்கு மாவட்டங்கள் செயல்படும்.

இந்த புதிய அமைப்பில், ஈரோடு மாநகர் மாவட்ட செயலாளராக ஆர்.ஜி.கே என்கிற ஜி.கார்த்திக் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்பு அமைப்புச் செயலாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முழு கொள்ளளவை எட்டும் செம்பரம்பாக்கம் ஏரி; பூண்டி ஏரியில் 4,000 கனஅடி நீர் வெளியேற்றம்



புயல் எச்சரிக்கையையொட்டி ஏற்கெனவே முழு கொள்ளளவை எட்டும் நிலையில் உள்ள செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து விநாடிக்கு 2,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. பூண்டி ஏரியிலிருந்து 4,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

புயல் எச்சரிக்கையையொட்டி, சென்னைக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய ஆதாரங்களில் ஒன்றான செம்பரம்பாக்கம் ஏரி கிட்டத்தட்ட முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில், பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகத் தொடர்ந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, செம்பரம்பாக்கம் ஏரியின் மொத்த நீர்மட்டம் 24 அடியில் 21.73 அடியாக உள்ளது. மொத்த கொள்ளளவான 3.645 டி.எம்.சி. அளவில், தற்போது 3.048 டி.எம்.சி. நீர் இருப்பு உள்ளது.

ஏரிக்கு தற்போது நீர்வரத்து விநாடிக்கு 100 கன அடியாக மட்டுமே இருக்கும் நிலையில், பாதுகாப்பு கருதி ஏரியிலிருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு அதிகப்படுத்தப்பட்டது. காலையில் மொத்தமாக 1,394 கன அடி நீர் வெளியேற்றப்பட்டது. இதில், உபரிநீராக 1,200 கனஅடி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டது. சென்னை குடிநீர்த் தேவைக்காக 165 கன அடியும்,சிப்காட்பயன்பாட்டுக்கு 4கனஅடியும் நீர்திறந்துவிடப்படுகிறது. இந்த 1,200 கனஅடி நீர் இரவு 2 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. கடந்த 24 மணி நேரத்தில் (காலை 6 மணி வரை) ஏரிப் பகுதியில் மழைப்பொழிவு எது வும் இல்லை. இருப்பினும், கனமழைக்கான ஆரஞ்சு அலர்ட் எச்சரிக்கையைக் கருத்தில் கொண்டு, நீர்பாசனத் துறையினர் ஏரியின் நீர் இருப்பை உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றனர்.

# சபரிமலைக்கு செல்லும் அய்யப்ப பக்தர்களை குறி வைத்து பணம் மோசடி



திருவனந்தபுரம்,

சபரிமலை கோவிலில் அய்யப்ப பக்தர்கள் தங்கி ஓய்வு எடுக்க ஏராளமான அறைகள் உள்ளன. இவை அனைத்தும் திருவிதாங்கூர் தேவஸ்தானத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன.தரிசனத்திற்கு முன்பதிவு செய்வது போல்,சபரிமலையில் ஓய்வெடுக்க அறைகளுக்கும் ஆன்லைனில் முன்பதிவு செய்ய வேண்டும்.இந்த நிலையில், சபரிமலையில் அறைகளுக்கு ஆன்லைனில் முன்பதிவு செய்வதற்காக போலி இணையதளம் உருவாக்கப்பட்டிருந்ததை பத்தனம்திட்டா சைபர் கிரைம் போலீசார் கண்டறிந்தனர். மேலும், அந்த குறிப்பிட்ட இணையதளத்தில் ஏராளமான அய்யப்ப பக்தர்கள் முன்பதிவு செய்து ஏமாற்றம் அடைந்ததும் தெரியவந்தது. இணையதளம் போலியானது என்பதை அறிந்ததும் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்தனர். ஆயிரக்கணக்கான பக்தர்களிடம் பணத்தை அபகரித்திருக்கலாம்எனகூறப்படுகிறது.இதனைத்தொடர்ந்து அந்த போலி இணையதளத்தை (sannidanamguesthouse.in) போலீசார் ஆய்வு செய்தனர். அதில் 2 செல்போன் எண்கள் கொடுக்கப்பட்டிருந்ததை கண்டறிந்தனர். அரியானாவைச் சேர்ந்த ஹமீது என்பவருடைய செல்போன் எண் ஒன்றும், மற்றொரு எண் யாருடையது என்பதையும் தொழில்நுட்ப ரீதியாக விசாரித்து வருகின்றனர். மேலும், போலி வலைத்தளங்களை நம்பி பக்தர்கள் ஏமாற வேண்டாம் என சைபர் கிரைம் போலீசார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.





தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஈரோடு பி.ஆறுமுகம் பட திறப்பு விழா மற்றும் நினைவஞ்சல் கூட்டம் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி .கே வாசன் எம்.பி பங்கேற்றார். ஈரோடு மாநகர் திண்டல் வித்யா நகர் திருமலை கார்டனில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மறைந்த மூத்த தலைவர் ஈரோடு பி. ஆறுமுகம் பட திறப்பு விழாநிகழ்ச்சியும்,நினைவஞ்சல்கூட்டமும்தமிழ்மாநிலகாங்கிரஸ்கட்சியின்தலைவர்ஜி.கே.வாசன்எம்.பிதலைமையில் நடைபெற்றது. அதன் பிறகு ஜி.கே. வாசன் செய்தியாளர்களை சந்தித்தார்.



ஈரோடு மாவட்டத்தில் அகில இந்திய பட்டியல் இன இளைஞர் பேரவை (பதிவு) புது டெல்லியை தேசிய தலைமையிடமாக கொண்டு மத்திய உள்துறை அமைச்சகத்தில் அங்கமான NFCHல் பதிவு பெற்று இந்தியா முழுவதும் பட்டியல் இன மக்களுக்கு பல்வேறு சேவைகள் செய்து வருகிறது.டெல்லி தமிழ்ச் சங்கம் பொதுச்செயலாளர் R. முகுந்தன் மற்றும் அகில இந்திய பட்டியல் இன பேரவையின் தேசிய பொதுச்செயலாளர் H.முத்துசாமி, கமல் அலுவலக பணி நிமித்தமாக ஈரோடு வருகையை முன்னிட்டு மாநில தலைவர் P.அய்யாசாமி , மாநில பொருளாளர் V.ஜெயராமன் மாவட்ட தலைவர் G.தங்கவேல் மரியாதை நிமித்தமாக மாலை அணிவித்தும், பொன்னாடை அணிவித்தும் வரவேற்று கௌரவித்தனர்.மேலும் மாவட்டஅலுவலகத்தைபார்வையிட்டுஆலோசனைகள்மற்றும்கருத்துரைகள்வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் உறுப்பினர்கள் சேகர், தண்டபாணி,திருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி

# பொது நூலகத்தில் உறுப்பினர்களை அதிகமாக சேர்த்து வாசிப்பு திறனை மேம்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றிய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்



ஈரோடு மாவட்டம், அவல் பூந்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், வாசிப்பை மேம்படுத்துவோம் திட்டத்தின் கீழ், பொது நூலகத்தில் உறுப்பினர்களை அதிகமாகசேர்த்து வாசிப்பு திறனை மேம்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றிய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (30.11.2025) வழங்கினார்.

நேற்றைய தினம் அவல் பூந்துறை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில், வாசிப்பை மேம்படுத்துவோம் திட்டத்தின் கீழ் மொடக்குறிச்சி ஒன்றியத்தில்உள்ளஅனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 339 ஆசிரியர்கள் மற்றும் 4782 மாணவர்கள் என அனைவரையும் பொது நூலகத்தில் உறுப்பினராக சேர்த்து அவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்துவதில் சிறப்பாக பணியாற்றியமைக்காக மொடக்குறிச்சி ஒன்றிய 113 பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிப்பு திறனை மேம்படுத்துவதில்சிறப்பாக பணியாற்றியமைக்காக ஆசிரியர்களை வாழ்த்தி பேசியும், வாசிப்பின் முக்கியத்துவத்தை பற்றி எடுத்துக் கூறியும், அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனைவர். மான்விழி, மாவட்ட கல்வி அலுவலர் பரமசிவம் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (30.11.2025) ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# சிவகங்கையில் சோகம்: 2 அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் 9 பேர் பலி



சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில்2அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் 9 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் குன்றக்குடி அருகேயுள்ள கும்மங்குடியில்

மாலை இரண்டு அரசு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த சம்பவத்தில், இரு பஸ்களில் பயணித்த 9 பேர் அதே இடத்தில் பலியாகினர்.40க்கும்மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த போலீசார் உள்ளூர் மக்கள் உதவியுடன் மீட்புபணி மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் ஆணையத்தின் மோசடி நடவடிக்கையை கண்டித்து டெல்லியில் பாமகவினர் போராட்டம்

## ராமதாஸ் அறிவிப்பு



சென்னை,

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

நான் 1980-ல் இயக்கம் தொடங்கி இன்று வரை 46 ஆண்டுகள் கட்சி நடத்தி வருகிறேன். கடந்த காலத்தில் சாலை வசதி, மின்சார வசதி இல்லாத நிலையில் வயல் வரப்பில் நடந்து சென்றோம். ராந்தல் விளக்கு பிடித்தும் பல கூட்டங்களில் பேசி 96 ஆயிரம் கிராமங்களுக்குச் சென்று கட்சி வளர்த்து சமூக நீதியை உயிர் மூச்சு கொள்கையாகக் கொண்டு மக்கள் மேம்பட ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு குரல் கொடுத்தும் போராடியும் வருகிறேன். தமிழ்நாட்டில் வன்னியர்கள் உள்ளிட்ட மிக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 20 சதவீத இட ஒதுக்கீடும், அருந்ததியர்களுக்கு 3 சதவீத இட ஒதுக்கீடும் முஸ்லிம்களுக்கு 3.5 சதவீத இட ஒதுக்கீடும் பெற்றுக்கொடுத்தேன். அதன் பின் வன்னியர்களுக்கு 10.5 சதவீத இட ஒதுக்கீடும் பெற்றுக்கொடுத்தேன்.ஆனால் இது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்திய அளவில் மத்திய கல்வி நிறுவனங்களின் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு(OBC) 27 சதவீத இட ஒதுக்கீடு மத்திய மருத்துவ படிப்பில் பட்டியலின பழங்குடியினர் (SC-ST) வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு பெற்றுக் கொடுத்ததை நாடே அறியும்.

நான் தொடங்கிய பாட்டாளி மக்கள் கட்சிக்கு பேராசிரியர் தீரன் தலைவராக இருந்து செயல்பட்டார். அடுத்து ஜி. கே.மணி 25 ஆண்டு காலம் தலைவராக செயல்பட்டு வந்தார். அடுத்து அன்புமணி தலைவராக விரும்பியதால் சென்னை அடுத்துள்ள திருவேற்காடு (GPN) ஜிபிஎன் பேலஸில் 28.5.2022அன்று பொதுக்குழுவை கூட்டி தலைவராக தேர்ந்தெடுத்து அறிவித்தேன். ஆனால் அன்புமணி சதி திட்டம் தீட்டி 2023 பொதுக்குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டதாக போலியான ஆவணங்களை டெல்லி தலைமை தேர்தல் ஆணையத்தில் கொடுத்து தேர்தல் ஆணையத்தை கையில் போட்டுக்கொண்டு 2026 வரையில் பதவியில் நீடிப்பதாக தேர்தல் ஆணையம் கடிதம் கொடுத்துள்ளது. இது மிகப்பெரிய கண்டனத்துக்குரியது. இது தேர்தல் ஆணையத்தின் மோசடியான துரோக நடவடிக்கை.

தேர்தல் ஆணையம் அன்புமணிக்கு உடந்தையாக உள்ளது. அன்புமணி கட்சியை என்னிடமிருந்து சூழ்ச்சியால் பறித்துக் கொண்டது கட்சி திருட்டு செயல். தேர்தல் ஆணையம் கட்சியை என்னிடமிருந்து பறித்து அன்புமணிக்கு திருடி கொடுத்துள்ளது. இப்படி எனது கட்சியை பறித்துக்கொண்டது என் உயிரை பறித்ததாகும். 46 ஆண்டு காலம் உழைத்து போராடிய என்னிடமிருந்து பறித்துக் கொண்டது சொல்ல முடியாத உயிர் பரிபோன செயல் கண்ணீர் வடிக்கிறேன். கலங்கி நிற்கிறேன்.

இதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். எனது கட்சி என்கைக்கு வரும் என நம்பிக்கையோடு இருக்கிறேன். தேர்தல் ஆணையத்தின் மோசடியான கட்சியை திருடி கொடுத்த ஜனநாயக படுகொலையை கண்டித்து நீதிகேட்டு பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் 02.12.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகில் பா.ம.ககவுரவத்தலைவர் ஜி.கே.மணி எம்.எல்.ஏ.., தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இதில் இன்னாள், முன்னாள், சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட, ஒன்றிய, நகர, பேரூர் பொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் பெருந்திரளாக கலந்து கொள்வார்கள்.

அடுத்து தேர்தல் ஆணையத்தின் மோசடி நடவடிக்கையை கண்டித்தும், நீதிகேட்டும் புது டெல்லியில் 04.12.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு போராட்டம் நடத்தப்படும். தமிழ்நாட்டிலிருந்து பா.ம.க.வினர் போராட்டத்தில் கலந்துகொள்ள டெல்லி செல்கிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோவையில் அதிர்ச்சி மகளிர் விடுதியில் பெண் வெட்டிக்கொலை





கோவை,

நெல்லை மாவட்டத்தை சேர்ந்த பாலமுருகன் - ஸ்ரீபிரியா தம்பதிக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். இதனிடையே கருத்து வேறுபாடு காரணமாக பாலமுருகனிடம் இருந்து பிரிந்து வந்து ஸ்ரீபிரியா கோவை மாவட்டத்திற்கு சென்று, தனியார் விடுதியில் தங்கி அங்குள்ள ஒரு நிறுவனத்தில் வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில், ஸ்ரீபிரியாவுக்கும் அவரது உறவினரான இசக்கிராஜா என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. அவர்கள் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தை பாலமுருகனுக்கு இசக்கிராஜா அனுப்பி வைத்துள்ளார். இதைப் பார்த்து ஆத்திரமடைந்த பாலமுருகன், நேற்று இரவு கோவை வந்துள்ளார் தொடர்ந்து இன்று அதிகாலை ஸ்ரீபிரியா தங்கியிருந்தவிடுதிக்கு பாலமுருகன் சென்றுள்ளார். விடுதியின் வாசலில் காத்திருந்த அவர், ஸ்ரீபிரியா வெளியே வந்தபோது தன்னிடம் இருந்த அரிவாளால் ஸ்ரீபிரியாவை வெட்டியுள்ளார். இதில் படுகாயமடைந்த ஸ்ரீபிரியா சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் உயிரிழந்தார்.

இது குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார், ஸ்ரீபிரியாவின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் பாலமுருகனை கைது செய்து அவரிடம் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். மகளிர் விடுதியில் தங்கியிருந்த பெண் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# டிட்வா புயல் காரணமாக 9 துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு நீடிப்பு

சென்னை:

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகி உள்ள டிட்வா புயல் சென்னைக்கு தென்கிழக்கே 400 கி.மீ. தொலைவில் உள்ளது. டிட்வா புயல் மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருகிறது. டிட்வா புயல் வடக்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து 30-ந்தேதி வட தமிழ்நாடு, புதுவை, ஆந்திர கடற்கரைகளுக்கு அருகே தென்மேற்கு வங்கக்கடலை வந்தடையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

டிட்வா புயல் காரணமாக டெல்டா மாவட்டங்களில் கனமழை பெய்து வருகிறது.டிட்வா புயல் காரணமாக நாகை, காரைக்கால், புதுச்சேரி மற்றும் கடலூர் ஆகிய 4 துறைமுகங்களில் 5ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நீட்டிக்க ப்பட்டு ள்ளது.

சென்னை, எண்ணூர், பாம்பன், தூத்துக்குடி,காட்டுப்பள்ளி ஆகிய 5 துறைமுகங்களில் 4ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நீட்டிக்க ப்பட்டு உள்ளது



Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.